# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,368 — 1924 ம் ஞு தைமீ 4 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1862 ம் ஆண்டின் 15 ம் நிம்பர் சட்டம்.

1862 ம் ஆண்டின் 15 ம் நிம்பர் சட்டத்தின் முதலாம் பிரிவின்படி தண்டிக்கக்கூடிய பின்வரும் குற்றங்களை சொல்லப்பட்ட சட்டத்தின் 7 ம் பிரிவின்படி புத்தளம் லோக்கல் போட் சங்கத்தாரால் சகலரும் அறிந்துகொள்ளும்படி பிரசித்தம்பண்ணப்படுகின்றது :—

எவராகிலும் பின்வரும் குற்றங்களின் எதையாவது செய்தால் ஐந்து பவுனுக்கு மேற்படாத ஒரு தெண்டத்துக்கு பாத்திரவாழியாவார்.

1. எவராகிலும் ஒரு றேட்டின் அல்லது பகிரங்கமான பாதையினுள் அல்லது கிட்ட இருக்கும் வாடகைக்குக் கொடுக்கக்கூடிய காணியின், வீட்டின் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரனாவது அல்லது குடியிருப்போனாவது அப்படிப்பட்ட காணியை அல்லது நிலத்தை எவருடைய சுகத்துக்காவது தீங்குவிளைக்கக்கூடிய மாதிரியாய் பத்தையும் கூளமுமாக வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

2. எவராகிலும் தான் குடியிருக்கும் வீடு, கட்டிடம் அல்லது காணியில் நாத்தமடிக்கும் அளை, பீலி, கான், கக்கூசு அல்லது குளிக்கக்கூசை வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

3. எவராகிலும் ஒரு றேட்டு அல்லது பகிரங்கமான பாதைக் கருகாமையால் இருக்கும் வீட்டின் கட்டிடம் அல்லது காணியில் இருப்போன் தக்க குப்பைவாளியில் அல்லாமல், நாற்றமடிக்கும் ஊத்தை அல்லது சாணிக்குமியல் அல்லது குப்பையை 24 மணித்தியாலத்துக்கு மேற்பட வைத்திருந்தால் அல்லது அப்படிப்பட்ட வாளியை துப்பரவுபண்ணாமல் கவனவீனமாக வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

4. எவராகிலும் தான் குடியிருக்கும் வீடு கட்டிடம் அல்லது காணியில் எவருடைய சுகத்துக்காவது தீங்குவிளைக்கக்கூடிய மாதிரியாய் ஆடு, மாடு, பன்றி அல்லது வேறு மிருகங்களை வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

5. ஒரு கட்டிடம் அல்லது சுவரின் சொந்தக்காரர் யாராகிலும் அதை அழிந்ததன்மையாய் அல்லது அதில் குடியிருப்பவருக்கு அல்லது பக்கத்திலிருக்கும் வீடு அல்லது கட்டிடத்துக்கு அல்லது அதில் குடியிருப்பவருக்கு அல்லது வழிப்போக்கனுக்கு ஆபத்தான நிலைபரத்தில் வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

6. எவராகிலும் தான் குடியிருக்கும் வளவுக்குள் கழிவு தண்ணீரை அல்லது நிலையாய் தரிக்கக்கூடிய தண்ணீரை தங்கவிட்டால் அல்லது கக்கூசை அல்லது குளிக்கக்கூசை நிறைந்து வழிந்தோடவிட்டால் குற்றவாளியாவார்.

7. எவராகிலும் ஒரு நீரோட்டத்தில், குளத்தில், தண்ணீர்தடாகத்தில், கிணற்றில் அல்லது தண்ணீர் ஊற்றில் ஏதாகிலும் செத்த மிருகத்தை, ஊத்தையை அல்லது கூளத்தை அல்லது நாற்றமான வஸ்துவை எறிந்தால் அல்லது எறிவிக்கச்செய்தால் அல்லது இவைகளுக்குள் நாற்றமான நீரை அல்லது அதைப்போன்ற அல்லது தான் குடியிருக்கும் வீடு அல்லது காணியிலிருந்து அழுக்குநீரை ஓடவிட்டால் அல்லது அத்தண்ணீரை வேறெவ்விதமாவது அசுசிப்பண்ணினால் குற்றவாளியாவார்.

8. எவராகிலும் இறச்சி, கோழி, மீன், பலவகை காய்கறி விற்பனவுக்காகப் பாவிக்கப்படும் மார்கட்டில், சாய்ப்பில் அல்லது கட்டிடத்தில் மனுஷதீனுக்குத் தகுதியற்ற இறச்சி, மீன், பலவகை காய்கறி விற்பனவுக்காக வெளியாய் வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

9. எவராகிலும் தான் விற்பனவுக்காக வெளிப்படுத்தி வைக்கும் அல்லது விற்கும் தீன் அல்லது குடிப்பனவு மனுஷதீனுக்குத் தகுதியற்றதென்று அறிந்து விற்பனவுக்காக வைத்தால் அல்லது விற்றால் குற்றவாளியாவார்.

10. எவராகிலும் லைசன்ஸ் இல்லாமல் அசுசியான அல்லது நாற்றமான மணம் வரக்கூடிய தொழிற்சாலையை வைத்திருந்தால் குற்றவாளியாவார்.

11. எவராகிலும் ஒரு மனுஷரின் சுகத்துக்கு தீங்குவிளைக்கக்கூடிய மாதிரி அல்லது ஓர் இடத்தில் தேங்காய் மட்டையையும் தும்பையும் வைத்திருப்பவர் குற்றவாளியாவார்.

12. எவராகிலும் ஒரு பிரசித்தமான ரோட்டில் அல்லது காணியில் அல்லது வெளியில் அல்லது தன் வளவில் அல்லது சமயல்சாலையிலிருக்கும் குப்பையை, சாம்பலை, ஊத்தையை அல்லது உடைந்த வீதிர்யை வீசினால் அல்லது தன் வேலைகாறனை வீசும்படி செய்வித்தால் குற்றவாளியாவார்.

லோக்கல்போட் ஆபீஸ்,
புத்தளம், 1923 ம் ௵ டிசெம்பர்மீ 21 ௳ தேதி.

ஜீ. ஸீ. மைல்ஸ்,
லோக்கல்போட் சபாநாயகருக்காக.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பலாத்தோட்டையில் வெடிமருந்துவைக்கும் சாலைக்குப்போகும் வழிக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 18,269. குறிச்சி—பலாத்தோட்டை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | — | .. 20 வயதுள்ள ஓர் தென்னமரத்தைக் கொண்ட கரத்தைப்பாதை | சார்ல்ஸ் சான்ஸ் .. | 0 0 6·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வெண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ பெப்புருவரி மாசம் 18 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்குக் களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1923 ம் ௵ மார்கழிமீ 22 ௳.

எச். ஏ. பேர்டன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கவேலை டிப்பாட்மென்றின் கூலியாட்களுக்கு லைன் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,582. குறிச்சி—தலவாக்கொல்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | செயின்ற் கிளயர் தோட்டம் .. | கூலி லைன் முதலியவை கட்டியிருக்கும் தோட்டம் | றையன் சிலோன் தோட்டக் கம்பனி | 0 0 24 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ தை மாசம் 28 ௳ தேதியிலன்று 10 மணிக்கு நுவரெலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியா கச்சேரி,
1923 ம் ௵ மார்கழிமீ 22 ௳.

ஈ. றீ. டைஸன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சவம் (மையத்து) அடக்கம்பண்ண என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 11,138. குறிச்சி—திக்வல்லை (சோனகர்).

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மரக்கஹமகத்மயா ப்தின்சிவ ஹிடியவத்த | தென்னந்தோட்டம் .. | (1) ஊசுபுலெவ்வைமரைக்கார் முகம்மது அலிமரைக்கார், (2) ஏ. எல். எம். நொதாரிஸ் அப்துல்ரகிமான், (3) ஒ. எம். எஸ். அப்துல்மகுது, (4) அ. ப. சாவுல்அமீது மற்றவர்கள் | 1 1 23·9 |
| 2 | ஷை .. | காற்பாதை .. | ஷை .. | .. 0 0 3·6 |
| 3 | அலியார்தோட்டம் .. | தென்னந்தோட்டம் .. | ஷை .. | .. 0 0 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஜனுவரிமாதம் 26 ந் தேதியிலன்று காலை நேரம் 10 மணிக்கு திக்வெல்லதானாயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1923 ம் ஸ்ரீ டிசம்பர் மீ 21 ந் உ.

ஜீ. எஸ். வுட்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தீவுப்பகுதியைச் சேர்ந்த நாரந்தனைக் கிராமத்தில் ஒழுங்கைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,976.   குறிச்சி—நாரந்தனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஓலந்து .. | ஒழுங்கை .. | கெ. சின்னக்குட்டி கைம்பெண் மங்களம் .. | 0 0 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஜனவரி (தை) மாசம் 30 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1923 ம் ஸ்ரீ டிசம்பர் மீ 12 ந் உ.

எல். டபிள்யு. சி. ஷிரூடர்,
அரசாட்சி ஏசண்டு

---

## உரிமைமெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இலக்கம் 8,496, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால் அவர்கள், 1924 ம் ஸ்ரீ (ஜனவரி) தைமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொளும்பு நீர்கொளும்பு டிஸ்திறிக்குகளின் உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உப உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

பி. சரவணமுத்து,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்குகளின் உப உதவி அரசாட்சி ஏசென்று.

குவனிப்பு—குறித்த காணிகளுக்கூடாக விருக்கும் வழிப்பாதை உரித்து காணிகளிலுள்ள சோந்தைக்குரித்து.

குறித்த காணிகளின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் சல்பிட்டி கோறளையில் பல்லேபத்துவில் கல்பிற்ற என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைத்திருக்கும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

பிரதமபடம் 18,138.

| காணித்துண்டு. | காணிப் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 6 .. | கல்பிற்றவெவ (குளம்) .. .. .. .. | 0 0 35 |
| 7 .. | ஷை .. .. .. .. | 0 0 5 |
| | | 0 1 0 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 6 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-ஆர். சூசேஅப்புவும் மற்றவர்களு முரித்தாடும் வெவகும்புற; கிழக்கு-ஆர். சுசேஅப்புவும் மற்றவர்களு முரித்தாடும் வெவகும்புற, யூ. தெகோனிஸ் அப்புவும் மற்றவர்களு முரித்தாடும் றதாகேகும்புற; தெற்கு-யூ. தெகோனிஸ் அப்புவும் மற்றவர்களு முரித்தாடும் றதாகேகும்புறவும், பீ. அகிரிசும் பீ. டொன் அல்விசும் உருத்தாடும் நாகாலந்தவும்; மேற்கு-பீ. தொன் மகிரிஸ் உருத்தாடும் கொடபொறகாலந்தவும் (பி. ப. 8,446/F 480) முடி உரித்தாடும் நாகாலந்த (பி. ப. 18,138/2).

---

[அறிவித்தல் இலக்கம் 8,497, கண்டி.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும்காணியிலே அல்லது அவற்றில் ஒன்றில் அல்லது அனேகத்தில் ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1924 ம் ஞு ஜனுவரிமீ 4 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கண்டிக் கச்சேரியில் மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அவற்றில் ஏதொன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென முகதாவில் அல்லது எழுத்தில் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தினுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப் பேசப்படாத குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்ட காணிகளில் ஏதாவது முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஏ. என். ஹட்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—இங்கு சொல்லிய நிலத்திலே யல்லது நிலங்களில் வழிப்பாதை உரித்து நிலங்களில் உடந்தையுள்ளதாக எண்ணப்படும்.

சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

இத்தால் இணைக்கப்பட்டிருக்கும் படத்தில்* காட்டியிருக்கிறபடி மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்ற் தும்பனை டிவிசன் உடபலாத்தைக் கோறளையின் கிரிகாம பாலுகோப்பிவத்தைக் கிராமத்திலிருக்கும் பின்னர்ச் சொல்லப்படும் காணித்துண்டுகள் :—

7,121 ம் இலக்க பிரதமபடம்.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | அற்றம்பகாகமுலத்தனை .. .. | 4 | 3 | 32 | 20 | பாலுகோப்பிவத்தை .. .. | 26 | 1 | 29 |
| 4 | ஷை (ஓடைக்காக விட்டிருக்கும் நிலம்) | 1 | 1 | 4 | 24 | ஷை .. .. | 50 | 0 | 22 |
| 5 | ஷை .. .. | 8 | 0 | 1 | 25 | ஷை. .. .. | 11 | 0 | 37 |
| 6 | பாலுகோப்பிவத்தை .. .. | 20 | 3 | 13 | 43 | ஷை (ஓடைக்காக விட்டிருக்கும் நிலம்) | 2 | 0 | 18 |
| 8 | ஷை (ஓடைக்காக விட்டிருக்கும் நிலம்) | 0 | 0 | 20 | 44 | ஷை .. .. | 7 | 2 | 2 |
| 15 | ஷை .. .. | 0 | 1 | 20 | 45 | ஷை .. .. | 0 | 2 | 24 |
| 16 | ஷை .. .. | 0 | 0 | 38 | | | 133 | 3 | 20 |

அவைகளின் எல்லைகளாவன: வடக்கே மடவள கிராமத்தின் எல்லைகளாலும்; கிழக்கும் தெற்கும்-காறிஸ்பத்து டிவிசனின் எல்லைகளாலும்; மேற்கே-முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோபிவத்தைக்காணியும் (7121 ம் இலக்கப் பிரதபடத்தில் 19 ம் காணித்துண்டு) பிற்றளையும், முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோப்பிவத்தைக் காணியும் (7121 ம் இலக்கப் பிரதமபடத்தில் 18 ம் காணித்துண்டு) டிக்கோயா, 163,911 ம், 159,212 ம், 155,309 ம், 348,241 ம், 348,240 ம் இலக்க உரித்துப்படங்களாலும், மலடோலையும், 232,193 ம் இலக்க உரித்துப்படமும், முடியாரால் உரித்துப் பேசப்படாத பாலுகோபிவத்தைக்காணியும் (7,121 ம் இலக்க பிரதமபடத்தில் காணித்துண்டு 13) முடியாரால் உரித்துப் பேசப்படாத பாலுகோபிவத்தைக் காணியும் (7121 ம் இலக்கப் பிரதமபடத்தில் காணித்துண்டு 12) 156,251 ம், 156,245 ம் 348,239 ம் இலக்க உரித்துப்படங்களும், முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோப்பிவத்தைக்காணியும் (7,121 ம் இலக்க பிரதமபடத்தில் காணித்துண்டு 10) 348,796 ம் இலக்க உரித்துப்படமும், பேரவடுளையும், 156,254 ம் இலக்க உரித்துப்படமும், முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோப்பிவத்தைக் காணியும், (7,121 ம் இலக்க பிரதமபடத்தில் காணித்துண்டு 7) மடவள கிராமத்தின் எல்லைகளும்.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைக்குள் பின்வரும் காணித்துண்டுகள் இப்பாகத்தின் அறிவிப்பிலிருந்து விலக்கப்பட்டதும் அவைகள் முடியாரால் உரித்துப்பேசப்படாததும், மேற்சொல்லிய 133 ஏககர் 3 றூட் 20 பேட்சு விசாலத்திலடங்கினதுமல்ல.

7,121 ம் இலக்க பிரதமபடம்.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 21 .. | பாலுகோப்பிவத்தை (முடியாரால் உரித்துப்பேசப்படாத காணி) .. .. | — |
| 22 .. | ஷை ( ஷை ) .. .. | — |
| 23 .. | ஷை ( ஷை ) .. .. | — |
| 156,417 ம் இலக்க உரித்துப்படம் | .. .. .. .. | 0 1 13 |
| 157,485 ம் இலக்க உரித்துப்படம் | .. .. .. .. | 0 1 5 |
| | | 0 2 18 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 7 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இலக்கம் 8,498, கண்டி.]

## 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படு காணியிலே அல்லது அவற்றில் ஒன்றில் அல்லது அனேகத்தில் ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1924 ஞூ (ஜனுவரி) தைமீ 4 தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கண்டிக் கச்சேரியில் மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அவற்றில் ஏதொன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென முகதாவில் அல்லது எழுத்தில் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாத குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்ட காணிகளில் ஏதாவது முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஏ. என். ஹுட்,
உதவி அரசாட்சி ஏசன்று.

குறிப்பு.—இங்கு சொல்லிய நிலத்திலே யல்லது நிலங்களில் வழிப்பாதை உரித்து நிலங்களில் உடந்தையுள்ளதாக எண்ணப்படும்.

### சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

இத்தால் இணைக்கப்பட்டிருக்கும் படத்தில்* காட்டியிருக்கிறபடி மத்தியமாகாண கண்டி டிஸ்திறிக்ற் காறிஸ்பத்து டிவிசன் மெதசியபத்து கோறளையின் கிரியாகம கிராமத்திலிருக்கும் பின்னர்ச் சொல்லப்படும் காணித்துண்டுகள் :—

7,121 ம் இலக்கப் பிரதமபடம்.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 26 | .. | பாலுகோப்பிவத்தை | .. .. .. .. | 10 | 1 | 25 |
| 27 | .. | ஷை | .. .. .. .. | 0 | 1 | 20 |
| 36 | .. | ஷை | .. .. .. .. | 2 | 3 | 36 |
| 37 | .. | ஷை | .. .. .. .. | 8 | 0 | 32 |
| 38 | .. | ஷை | .. .. .. .. | 15 | 3 | 0 |
| 39 | .. | ஷை | .. .. .. .. | 0 | 1 | 33 |
| 41 | .. | ஷை | .. .. .. .. | 0 | 1 | 20 |
| | | | | 38 | 2 | 6 |

அவைகளின் எல்லைகளாவன: வடக்கே-உடபலாத்தைக் கோறளை எல்லைகளும்; கிழக்கே-53,948 ம், 339,505 ம், 173,071 ம் இலக்க உரித்துப்படங்களும், மலதோலையும், ஒற்றடிப்பாதைக்காக விட்டுவைக்கப்பட்டிருக்கும் பாலுகோப்பிவத்தையும், (6,288 ம் இலக்க பிரதமபடத்தில் காணித்துண்டு 1,128), 9,687 ம் உரித்துப்படமும்; தெற்கே-ஆர். எம். லொக்குபண்டாவாலும் மற்றவர்களாலும் உரித்துப்பேசப்பட்ட கிரிவனவேகேனயும்; மேற்கே-டிக்லையயும், முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோப்பிவத்தைக் காணியும் (7,121 ம் பிரதமபடத்தில் காணித்துண்டு 42), 162,137 ம் இலக்க உரித்துப்படமும், முடியாரால் உரித்துப்பேசப்படாத பாலுகோப்பிவத்தைக் காணியும் (7,121 ம் பிரதமபடத்தில் காணித்துண்டு 40) மலடோலையும், ராஜமனளையும், உடபலாத்தைக்கோறளை எல்லைகளும்.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைக்குள் பின்னே சொல்லப்படும் காணித்துண்டுகள் இப்பாகத்தின் அறிவிப்பிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறதென்றும், அவைகளின் மொத்த விசாலம் 2 றூட் 26 பற்சஸ் மேற்சொல்லிய 38 ஏக்கர் 2 றூட் 6 பற்சஸில் அடங்கினதில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

7,121 ம் இலக்கப் பிரதமபடம்.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | .. | பாலுகோப்பிவத்தை (முடியாரால் உரித்துப்பேசப்படாத காணி) | | .. | — | | |
| 31 | .. | ஷை | .. .. .. | .. | 0 | 0 | 5 |
| 35 | .. | ஷை | (முடியாரால் உரித்துப்பேசப்படாத காணி) .. | .. | — | | |
| — | .. | 154,646 ம் இலக்க உரித்துப்படம் | .. .. | .. | 1 | 0 | 30 |
| — | .. | 181,568 ம் | ஷை .. .. .. | .. | 0 | 1 | 13 |
| 29 | .. | 349,165 ம் | ஷை .. .. .. | .. | 0 | 0 | 4 |
| 30 | .. | ஷை | ஷை .. .. .. | .. | 0 | 0 | 18 |
| 32 | .. | ஷை | ஷை .. .. .. | .. | 0 | 0 | 10 |
| 33 | .. | ஷை | ஷை .. .. .. | .. | 0 | 0 | 11 |
| 34 | .. | ஷை | ஷை .. .. .. | .. | 0 | 1 | 18 |
| | | | | | 2 | 0 | 29 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 8 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

"உப்பு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக் கொடுக்க" வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி ஏசன்றுத்துரை அவர்களால் 1924 ம் ஆண்டு தை மாதம் 22 ந் திகதி பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1923 ம் ஆண்டு பெரும்போகம் உப்பு செய்கைபண்ணிச்சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் உப்பை முதல் தில்லையடி, பின் மேற்கு அதின்பின் கிழக்கு உப்பளங்களிலிருந்து அல்லது (1) புத்தளம் உப்புச் சாலைகளில் நிறுத்து ஒப்புக்கொடுக்க அல்லது (2) கிழக்கு உப்பளத்தில் அமைந்திருக்கும் மேடையில் குவிக்கிறதற்காக.

கேள்விக்காரர்கள் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் :—

(1) சாக்குகளின் வாய்கள் மூடிக்கட்டி ஏற்றுமதிசெய்கிறதற்கு இரண்டு வீதம் 1,000 அந்தர் உப்புக்கு வெவ்வேறையாய் விபரித்துக் காட்ட வேணும். (1) உப்புச் சாலையில் நிறுத்து குவிக்கிறதற்கு அல்லது (2) மேடை வாசலில் சிறு வண்டில்களில் ஒப்புக்கொடுக்கிறதற்கு.

(2) முதலாம் விதத்துக்கு கேள்விக்காறர் உப்பளத்தில் நாள் வீதம் 1,450 அந்தர் உப்பு கொண்டுவந்து நிறுத்து கொடுக்கவேணும் அல்லாது இரண்டா விதத்துக்கு நாள் வீதம் மேடைக்கு 1,600 அந்தர் உப்பு கொண்டுவந்து கொடுக்கவேணும். கேள்விக்காறர் மேற்படி கொண்டுவாத் தவறின ஒவ்வொரு நாளைக்கும் பத்து ரூபாவுக்கு அதிகரியாமல் உதவி ஏசண்டர் துரையவர்கள் விருப்பப்படி தெண்டம் அடிக்கப்படுவார்கள்..

(3) வேலைகள் முதலாம் விதத்துக்கு 1924 ம் ஆண்டு மாசி மாதம் 1 ந் திகதி தொடங்கப்படும் இரண்டாவதுக்கு பங்குனி மாதம் 1 ந் திகதி தொடங்கப்படும்.

(4) ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் திறைசேரியில் ஆவது அல்லது எந்தக் கச்சேரியிலாவது 200 ரூபாய் கட்டி பற்றிச்சீட்டை கேள்விப்பத்திரத்தோடு அணைக்கவேணும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கொந்திருத்தை சரியாய் நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட பிணை கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத பணம் கேள்விக்காறருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

(5) கொந்தீசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரனும் தனக்குப்பதிலாய்ப் புத்தளத்தில் ஓர் பெயர் வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

6. இந்தக் கொந்திருத்து சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல் விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

(7) கேள்வியின் வீதங்களையிட்டு ஏதேன் மாற்றுதல் அல்லது திருத்தங்கள் பண்ணினால், அந்த இடத்திலே கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்கவேண்டும்.

(8) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த வருமானக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் மூலமாய் அனுப்பவேண்டும்.

(9) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் அன்று கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமா யிருக்கவேண்டும்.

(10) பிணை உடன்படிச்கை கடுதாசிகள் சரிபிழைபார்க்கும் முடியின் தரணியின் சிலவுகள் அனுகூலப்படும் கொந்திருத்துக்காரனால் கொடுக்கப்பட வேண்டும்.

(11) வண்டிகளில் ஏற்றமுன் உப்புச்சாக்குகளின் வாய்கள் கொட்டுகளில் தானே கட்டப்பட வேணும்.

(12) கவுண்மேந்தார் வைத்திருக்கும் தவறுபோன கொந்திருத்துக்காறருடைய டாப்பிலே கேள்விக்காறர் ஆர் உடைய பெயர் என்றாலும் வேறையாருடனும் ஒன்றித்தாவது அல்லது தனியே ஆவது இருந்தால் அவையுடைய கேள்வி ஏற்கப்படமாட்டா. அப்படி யிருக்கும் ஆட்கள் ஆருக்கென்றாலும் கேள்விக்காறர் தத்துவம் கொடுக்கப்படாது அல்லது அவையை தங்களுக்குகீள் வேலைசெய்கிறதற்கு ஏற்கப்படாது. புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்கள் தனக்கு நியாயமாகத் தெரிந்து எழுத்தில் அறிவித்தால் அப்படி அறிவிக்கப்படும் பெயர்வளியுள்ள ஆட்களையும் ஏற்கப்படாது.

(13) இன்னும் ஏதேன் இவைகளைப்பற்றிய விபரங்கள் அறியவிரும்புவோர் புத்தளம் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

(14) எந்த நேரமாவது ஒரு மாதத் தவணை எழுத்தில் கொடுத்து எந்தக் கொந்திருத்தையாவது தள்ளுகிறதற்கு புத்தளம் உதவி ஏசண்டுத்துரை யவர்கள் உரித்துடையவராய் இருப்பார்.

(15) மேற் சொல்லப்பட்ட விதிகளைச் சரியாக அனுசரிக்காத எந்தக் கேள்விப்பத்திரமாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(16) புத்தளம் உதவி ஏசண்டர்துரை யவர்களின் உத்தரவின்றி உடன்படிக்கையை இன்னொருவருக்குக் கொடுக்கவாவது அல்லது சாட்டுதல்பண்ணவாவது கூடாது.

(17) எந்தக் கேள்விப்பத்திரங்களையாவது அல்லது ஒன்றின் எப்பகுதியையாவது கேள்வியில்லாமல் தள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ கொவர்ணமேந்தாருக்குத் தத்துவமுண்டு.

டபிள்யு. கே. எச். கம்பல்,
உதவி ஏசன்றர்.

புத்தளம் கச்சேரி,
1923 ம் ௵ மார்கழிமீ 18 ந் உ.

---

## வழக்குப்புத்தகங்களை அழித்தலைப்பற்றிய அறிவித்தல்.

1875 ம் ஆண்டு தொடங்கி 1876 ம் ஆண்டு வரையிலும் கொழும்பு டிஸ்திறிக் கோட்டிலுள்ள தேள்வையில்லாதவும் பெறுத வழக்குகள் நம்பர்கள் 68,702 ல் இருந்து 69,955 வரைக்கும் மாசி மாதம் முதலாம் தேதி முதல் மூன்று மாதம் களிந்தவுடனே 1894 ம் ஆண்டின் 12 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் அழித்துப்போடப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

எந்த வழக்குகளிலாவது உடந்தைப்பட்டவர்கள் ஏவுதல் அல்லது பெட்டிச மூலமாகுதல் போதிய காரணம் காட்டி அவ்விதமான வழக்கு புஸ்தகங்களை அழிக்கப்படாது என்று உரித்துப்பேசலாம்.

டிஸ்திறிக்கோடு, கொழும்பு,
1923 ம் ஆண்டு மார்கழிமீ 21 ந் உ.

டபிள்யு. எஸ். டசேறம்,
டிஸ்திறிக் நீதிபதி.

---

H. ROSS COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.